**ஆகஸ்ட் - 28**

**"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு." 2தீமோ 4 : 2**

மற்றவர்களுக்கு சௌகரிய குறைவான, தகுதியற்ற நேரத்தில் தலையிட்டு அந்த நற்செய்தியைச் சொல்லி இவ்விதமாக நியாயத்தின், ஒழுங்கு முறையின் சட்டங்களை மீறலாம் என்பதை இது குறிக்கவில்லை. நமக்கு எவ்வளவு சௌகரியக் குறைவாக இருந்தாலும் அப்பொழுது நற்செய்தியை சொல்லுவதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்குமானால், நாம் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, சாத்தியத்தின்பேரில் அன்பையும் அதற்கு ஊழியஞ்செய்ய ஊக்கமான ஆசையையும் உடையவர்களாயிருக்க வேண்டுமென்பதைத்தான் இது நிச்சயமாகக் குறிக்கிறது. நம்முடைய ஜீவியத்தின் முக்கியமான தொழில் அதுதான். அதற்கு ஜீவியம் கூட துணையாக இருக்கிறது. ஆகையால், ஊழியத்திற்காக உள்ள எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் தள்ளி வைக்கக் கூடாது.

**- Z ’03, 189(R 3210)**

தேவன் வெளிப்படுத்தியிருக்கிற கருத்துக்களை வேதாகமம் கொண்டதாயிருக்கிறது. இவைகள் உபதேசங்களையும், கட்டளைகளையும், வாக்குத்தத்தங்களையும், புத்திமதிகளையும், தீர்க்கதரிசனங்களையும், சரித்திரங்களையும், அடையாளங்களையும் கொண்டதாக இருக்கின்றன. திருவசனத்தைப் பண்ணுவது என்பது, இவைகளை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவத்தைக் குறிக்கிறது. இதை சத்திய பிரதிகளையும், புஸ்தகங்களையும், விநியோகிக்கிறவர்களாக நம்முடைய பாஷையிலும், மற்றவர்களுடைய பாஷையிலும் செய்யலாம். இந்த இரண்டு வழிகளில் மற்றவர்கள் பிரசங்கம் செய்ய உதவி செய்யலாம். எப்பொழுதும் மற்றவர்களுடைய ஏற்ற சமயத்தில், அது நமக்கு உகந்ததாக இருக்கின்றதா இல்லையா என்று எண்ணாமல், அதைச் செய்ய வேண்டும். அது மற்றவர்களுக்கு உகந்த சமயமாயிருக்குமானால், நம்முடைய வசதி புறக்கணிக்கப்பட வேண்டும். இவ்விதமாக மாத்திரம் நாம் கர்த்தரின் விவகாரத்திற்காக மரண பரியந்தம் நமது ஜீவனைக் கொடுப்போம். நம்முடைய சொந்த சமயத்திடம் யோசனை கேட்போமானால், நாம் தியாகம் பண்ணத் தவறி விடுவோம். **- P ’30, 110.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 40:8; 96:2,3; பிர 11:6; ஏசா 6:8; 61:1-3; எரே 20:9; மத் 5:14-16; லூக் 24:47-49; யோவா 18:37; அப் 1:8; 8:4-6,31,32,35; 10:42; ரோம 10:14-18; 12:6-8; எபே 4:15;1 தெச 1:8; 1தீமோ 2:6,7; 4:13.**

**கோபுர வாசிப்பு : Z ’16, 140 (R 5893)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் வசனத்தைப் போதித்தேனா? அது எனக்கு ஏற்ற சமயமாயிருந்ததா? இல்லையா? நான் தவறியிருந்தால் தவறுதலுக்குக் காரணம் என்ன? வெற்றிக்கு உதவியது எது? எனக்கும் மற்றவர்களுக்கும் கிடைத்த பலன்கள் எவை? இது சம்பந்தமாக இந்தவார அனுபவங்களிலிருந்து நான் படிக்கக்கூடிய பாடங்கள் எவை?**